திரு. இ. எஸ். தியாகராஜன் : ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளை ஆராய அரசியல் தலைவர்களின் கூட்டம் ஏதாவது கூட்ட உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தப் பரிந்துரைகளை ஒவ்வொரு கட்சியினுடைய தலைவர்களும் அவர்களுடைய கட்சி மட்டத்தில் ஆராய்ந்து தங்களுடைய கருத்துக்களை அறிவிப்பார்கள் என்று அரசு நம்புகிறது.

திரு. சோ. கருணைநாதன் : ராஜமன்னார் குழுவில் எவ்வளவு பேர் இடம் பெற்றுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது ஏற்கனவே நடந்து முடிந்த கதை. இது விடியற்காலையில் சீதைக்கு ராமன் என்ன உறவு என்று கேட்பது போல் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : ராஜமன்னார் குழுவின் பரிந்துரைகளைச் சட்டசபையில் விவாதிக்க ஒரு நாள் ஒதுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அடுத்த கூட்டத் தொடரில் அதற்கு ஒருநாள் ஒதுக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ராஜமன்னார் அறிக்கையின்மீது இந்த அரசாங்கத்தின் மேல்நடவடிக்கை என்ன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதைத்தான் இப்போதே சொன்னேன். ஒவ்வொரு கட்சியின் தலைவர்களும் அந்தந்தக் கட்சி மட்டத்தில் ஆராய்ந்து அந்தக் கருத்துக்களை எல்லாம் இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்ல இருக்கிறார்கள். அவைகளுக்குப் பிறகு தான் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப்பற்றி முடிவு செய்யும்.

திரு. எம். சுரேந்திரன் : அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் ஒரு நாள் ஒதுக்குவதாகக் கூறினார்கள். அப்படி ஒதுக்குகிறபோது, முழுவதையும் அரசாங்கம் ஆராய்ந்து அரசாங்கக் கருத்தை தனியாகத் தயாரித்து இந்தச் சபையில் வைக்கப்படுமா அல்லது ஒட்டு மொத்தமாக விவாதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அரசாங்கத்திற்கும் சில கருத்துக்கள் இதிலே உண்டு. அரசாங்கத்தின் கருத்துக்களை மாத்திரம் வலியுறுத்தாமல் இங்குள்ள அனைத்துக் கட்சிகள் தலைவர்களுடையவும், உறுப்பினர்களுடையவும் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு ஜனநாயக மரபில் இந்த அரசாங்கம் வழக்கம்போல் செயல்படும்.

Transfer of Capital of Tamil Nadu to Tiruchirappalli.

* 549 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have received any request during the end of June, 1970 from any person or body to transfer the Capital of Tamil Nadu to Tiruchirappalli,

1971 ஜூலை 30]

(b) if so, the name of the person or body from whom such a request has been received; and

(c) the action taken thereon?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : While it can be considered as reasonable that there is no place for this question, may I know whether there is any programme on the part of the Government to decentralise some of the offices and shift them to Tiruchi and Madurai, so that the congestion in Madras City can be reduced? What are the steps taken by this Government in this regard? If I remember aright, even the Chief Minister has given some suggestions during the last meeting. Therefore, may I know whether any such concrete proposals are there to decentralise some of the offices in some places like Tiruchi, Madurai and Coimbatore?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைநகரத்தை மாற்றுவதற்கு எந்த விதமான உத்தேசமும் கிடையாது. ஆனால் அலுவலகங்களைப் பகிர்ந்து வைப்பதைப் பற்றி நான் அவசரப்பட்டு எதையும் சொல்லி விட முடியாது. அது ஆராய்ந்து சொல்ல வேண்டிய விஷயம்.

திரு. கு. காமாட்சி: ஆந்திரமும் கேரளமும் தமிழகத்தோடு இணைந்திருந்த நேரத்தில் சென்னை தலைநகராக இருந்தது. இப்போது தமிழ்நாடு தனித்து இயங்குகிறது. ஆகவே தமிழ் நாட்டின் மையமாக இருக்கிற திருச்சியில் தமிழ்நாட்டின் தலைநகரம் இருக்குமேயானல் எல்லா உறுப்பினர்களும் மிக விரைவிலே வந்து சேருவதற்கும், அதற்கான செலவுகள் குறையவும் செய்யும் என்று கருதுகிறேன். ஆகவே அதை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சென்னை மாநகரம் 25 லட்சம் மக்களைக் கொண்ட பெரிய நகரமாகும். இந்த நகரத்திற்கு சரித்திர முக்கியத்துவம் எல்லாம் இருக்கிறது. திருச்சியில் இருக்கிற எல்லாச் சாலைகளையும் ஒன்றாக இணைத்தாலும் சென்னையில் இருக்கிற மவுண்ட் ரோடு சாலைக்கு இணையாக அது இருக்காது என்பதை உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். மேலும் சென்னையில் இருப்பதால் யாரும் வந்து போவதற்கு கஷ்டம் இருப்பதாகத் தெரியவில்லை. சென்னையில் இருக்கும்போதே எவ்வளவோ பேர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் திருச்சிக்குப் போய்விட்டால் என்னவாகுமோ என்ற பயம் என்னை அச்சுறுத்திக் கொண்டிருக் கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: மைசூரில் பங்களூரில் கட்டப் பட்டிருப்பது மாதிரி தலைமைச் செயலகம், புதிய சட்டசபை இவற்றை யெல்லாம் ஒன்றாக ஒரேயிடத்தில் கட்டுவதற்கு ஏதாவது ஒரு திட்டம் தீட்டியிருக்கிறதா இந்த அரசு?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நாங்களாகக் கட்ட ஆரம்பித் தால் இங்கு எதிர்ப்பு வரும் என்று பயந்து கொண்டிருந்தோம். இப்போது அந்தத் தரப்பிலிருந்து அந்த ஆலோசனை வந்த பிறகு அது நிச்சயமாக கவனிக்கப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அம்மாதிரி அரசுக்கு ஆலோசனை இருக்குமென்று சொன்னல் இப்போது கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் நிறைய காலியிடம் இருக்கிறது. அந்த இடத்தில் கட்டும் நோக்கம் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : அப்படிப் புதிதாகக் கட்டுவதாக இருந்தால் அதற்கு கவர்ன்மெண்ட் எஸ்டேட்டைத் தேர்ந்தெடுத்தால் மேலும் போக்குவரத்து நெருக்கடிகள் தவிர்க்க முடியாததாகத்தான் இருக்கும். ஆகவே இன்னும் கொஞ்சம் தொலைவில் கிண்டிப் பகுதியில் அதைக் கட்டலாமா என்று யோசிக்கிறேம். அதுவும் அம்மையார் அவர்கள் சொன்ன பிறகு அந்த யோசனையில் எங்களுக்குக் கொஞ்சம் அழுத்தம் பிறக்கிறது.

திரு. என். கணபதி : பொது மக்களின் நலனை உத்தேசித்து, வசதியை உத்தேசித்து உயர்நீதிமன்றத்தின் ஒரு பகுதியை மதுரைக்கு மாற்றுவதாக இந்த அரசு யோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னுர்கள். பொது மக்களின் நலனை உத்தேசித்து, வசதியை உத்தேசித்து அம்மாதிரி ஒரளவிற்கு திருச்சி அல்லது மதுரைக்கு மாற்றும் உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணநிதி : நான் சொல்லாத ஒன்றை நான் சொன்னதாகச் சொல்லி கேள்வியை எழுப்பியிருக்கிறர்கள். நான் உயர்நீதிமன்றத்தை மாற்றுவதற்கு உத்தேசம் இருப்பதாகச் சொல்ல வில்லை. ஹாண்டே அவர்களின் கேள்விக்கு, அவசரப்பட்டு அலுவலகங்களைப் பகிர்ந்து ஆங்காங்கே வைப்பது பற்றி எந்த முடிவும் சொல்ல முடியாது, அது ஆராயப்பட வேண்டும் என்றுதான் சொன்னேன்.

பர்மா, இலங்கை அகதிகள்.

* 562 வின—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :—

பர்மா, இலங்கை அகதிகள் நம் மாநிலத்தில் எத்தனை பேர் குடியமர்த்தப்பட்டுள்ளனர்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து :

பர்மா அகதிகள்.—45,621 குடும்பங்களுக்குப் புதுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 2,502 குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அகதிகள்.—3,747 குடும்பங்களுக்குப் புதுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. 108 குடும்பங்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. சு. துரைசாமி : பர்மா, இலங்கை அகதிகளைப் பொறுத்த வரையில் நமது அரசு எந்தெந்தத் துறைகளில் அவர்களுக்கு உதவி செய்கிறர்கள்? இதற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து என்ன உதவி கிடைக்கிறது என்று அறிய விரும்புகிறேன். மேற்கொண்டும் பர்மா, இலங்கையிலிருந்து வரும் அகதிகள் எவ்வளவு பேர்கள் என்றும் அறிய விரும்புகிறேன்.